நாள்.20.02.2026

**அசல் வழக்கு எண்.109/2022**
**பெயர். குணசேகரன்**

**த.பெ. ரெங்கசாமி**

**பி.வா.சா.3– வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். எழுத, படிக்க தெரியும். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி அழைத்தன்பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்த வாக்குமூலம் 1ம் பிரதிவாதி தயார் செய்துகொடுத்து வழக்கறிஞர் தயார் செய்துநான் கையெழுத்து போட்டேன் என்றால் இல்லை நான் தான் விவரங்களை சொன்னேன். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதற்கு 1ம் பிரதிவாதி பதில் கொடுத்துள்ளார் அதுபற்றி தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கு சொத்தை பொறுத்து வழக்கறிஞருக்கு அறிவிப்பு கொடுத்த விவரமும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

எனது நிருபண வாக்குமூலத்தில் பரிவர்த்தனை நடந்ததாக சொல்லியுள்ளேன் எந்த தேதி, மாதம், வருடம் பற்றி சொல்லவில்லை என்றால் 2010 வருடம் என்று சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் எனது வாக்குமூலத்தில் தேதி, மாதம், வருடம் இல்லை என்றால் ஆமாம். எந்த சொத்து ச.எண், விஸ்திரணம் எங்கள் குடும்பத்திற்கு கொடுக்கப்பட்டது என்றால் ச.எண் தெரியாது. விஸ்திரணம் 91 குழி. அதுபோல் எந்த பரிவர்த்தனையும் நடக்கவில்லை நான் பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி வாதிக்கு வழக்கு தாக்கல் செய்யும் முன்பு நோட்டீஸ் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதனால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நடந்த விவரம் எதுவும் தெரியாது என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–1ல் என் அண்ணன் மனைவி நல்லம்மாள், மலையப்பன் மற்றும் நான் சேர்ந்து 26.08.2010 ல் வாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் ஆமாம். கிரைய பத்திரம் தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் ஆமாம்.

வா.சா.ஆ.1 பாரா 2ல் "***நாங்கள் உங்களிடம் சுத்த கிரையம் செய்துகொடுப்பதாக பேசி ரூ.20,000 ரொக்கமாக பெற்றுக்கொண்டுவிட்டபடியால், இன்றுமுதல் தாங்கள் இதனடியில் கண்ட சொத்தை அனுபவித்துக்கொள்ளவேண்டும்***" என்று உள்ளதா என்றால்

ஆமாம். எனது வாக்குமூலத்தில் பாரா 3 ல் "எனக்கு பாகமாக கிடைத்த இடத்தை என் அண்ணன் முருகையன் மகன் பாண்டியனிடம் விற்பனை செய்துவிட்டேன்" என்று சொல்லியுள்ளேன். அது எந்த ஊரிலுள்ளது என்று சொல்லவில்லை என்றால் ஆமாம். ஆரோக்கியசாமிக்கு பரிவர்த்தனையாக கொடுக்கப்பட்ட இரு புல எண்கள் என்று சொல்லியுள்ளேன் ஆனால் ச.எண் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். ச.எண் என்ன என்றால் 431/3பி, 431/4. 431/4 எவ்வளவு விஸ்திரணம் என்றால் 34 செண்ட். அது யாருக்கு சொந்தம் என்றால் வின்சனிடம் உள்ளது. 431/4 வாதிக்கு எப்படி கிடைத்தது என்றால் நாங்கள் 431/4 யை பரிவர்த்தனை மூலம் வாதிக்கு கொடுத்துவிட்டோம். 431/4 பரிவர்த்தனை முலம் கிடைத்ததல்ல நான் பொய் சொல்கிறேன் என்றால் நாங்கள் பரிவர்த்தனை தான் செய்துகொண்டோம். அதற்கு ரெகார்டு உள்ளதா என்றால் இல்லை.

431/4 என்பது 1ம் பிரதிவாதி கிஸ்டின் பால்ராஜ்க்கு சொந்தமானது அதை மறைத்து நான் பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. 431/3பி–க்கு தான் வழக்கு நடக்கிறது என்றால் ஆமாம். அதன் விஸ்திரணம் எவ்வளவு என்றால் 17 செண்ட். புல எண். 431/4 30.07.2002 ல் ரெங்கசாமி மகன்கள் முருகையன், மலையப்பன் இருவரும் சேர்ந்து ஆரோக்கிய சாமிக்கு கிரையமாக கொடுக்கப்பட்ட சொத்து என்றால் நான் அப்போது இல்லை எனக்கு தெரியாது என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. தற்சமயம் அந்த சொத்து 1ம் பிரதிவாதியிடம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 26.08.2010 ம் தேதி சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கொடுத்துவிட்டு தற்போது பரிவர்த்தனை செய்துகொண்டாதகவும் பணம் வாங்காமல் கிரயம் கொடுத்ததாகவும் பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல.

நான் 1ம் பிரதிவாதிக்கு நெருங்கிய நண்பர் என்பதால் அவர் சொன்னதன்பேரில் அவருடைய வார்த்தைக்கு ஆசைப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நாங்கள் பணத்தை வாங்கிதான் எழுதிக்கொடுத்தோம் இனாமாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B

District Munsif, Pattukkottai.